சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய

பரஞ்சோதியார் என்னும்

# சிறுத்தொண்டநாயனார்

## திவ்வியசரித்திரம்.



இஃது

இந்துமதாபிமானிகளின் வேண்டுகோளிற் கிசையச்

சுருக்கமாகத்தொகுக்கப்பட்டு,

சை. ர. நமசிவாயசெட்டியார் அவர்களால்

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது

---

சர்வதாரி௵ ஐப்பசி௴

1888

இதன் விலை மை அணா 1 தபாற்கூலி 10 - க்குப் மை. 6

# READY! READY!! READY!!!

வாசிப்பதற்கு மிக உற்சாகந்தரும்கதைப்புத்தகங்கள்.

## கடன்பட்ட கந்தன் கதை,

பிரதி 1-க்கு விலை பை ஆறு.

## புருஷத்துவேஷ பூதகி கதை.

பிரதி 1-க்கு விலை அணா ஒன்று

பிரதி 8-க்குத் தபாற்கூலி அணா அரை.




## விவேகசுந்தரம்.

No 1, 2, 3, 4, 5, 6, 7, 8, (9&10 in the Press.)

## விவேகபோதினி.

Nos. 1, 2, 3, 4, 5, 6, (7, 8, in the Press.)


பிரதி 1-க்

10-க்குத் தபாற்கூலி அணா அரை.

வேண்டுவோர் மதராஸ் ரிப்பன்பிரெஸ், சை. ர. நமசிவாய செட்டியாரிடம் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.



நாயகர



ஈபதே வர



பாலசுபபிரமணியர.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அறுபத்துமூன்றுநாயன்மார்களுள்

ஒருவராகிய

# சிறுத்தொண்டநாயனார்

## திவ்வியசரித்திரம்.

சந்தானாசாரியராகிய

உமாபதிசிவாசாரியார்

திருவாய்மலர்ந்தருளிய

### புராணசாரம்.

பல்குமருத்துவரதிபர் செங்காட்டங் குடிவாழ்
படைத்தலைவ ரமுதளிக்கும் பரஞ்சோதியார்மெய்ச்
செல்வமிகு சிறுத்தொண்டர்காழி நாடன்திருவருள்
சேர்ந்தவர் வளருஞ்சீராளன் றன்னை
நல்குதிருவெண்காட்டு நங்கைசமைத்திடப் பின்னன
மதிச்சந்தனத் தாதிதலைக்கறி யிட்டுதவப்
புல்கவரும்வயிரவர்தா மகிழ்ந்து மகவருளப்
போற்றியவர் சிவனருளே பொருந்தினாரே.

## திவ்வியசரித்திரம்.

சோழமண்டலத்திலே திருச்செங்காட்டங்குடியிலே ஆமாத்தியர்குலத்திலே, பரஞ்சோதியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் ஆயுள்வேதங்களிலும், படைக்கலத்தொழில்களிலும், குதிரையேற்றம் யானையேற்றங்களிலும், மிகச்சிறந்தவர். வேதாகமங்களின் மெய்ப்பொருளை அறிதல்வேண்டும் என்னும் அவாவினோடு திருவருளை முன்னிட்டுப் பரீட்சித்தமையால் பரமசிவனே மெய்க்கடவுள் என்றும், அவருடைய திருவடிகளை அடைதலே முத்திநெறியென்றும் தெளிந்து, அவருடைய திருவடிகளை அகோராத்திரம இடைவிடாது அன்பினோடு தியானிப்பவர். சிவனடியார்களுக்கு எக்காலமுந் திருத்தொண்டு செய்பவர். அவர் அரசனிடத்திலே அணுகராகி அவன்பொருட்டு யானைசெலுத்திக்கொண்டு சென்று, அவனோடு மாறுபட்ட பல அரசர்களைவென்று, அவர்கள் தேசங்களைக் கைப்பற்றி, அவனால் நன்குமதிக்கப்பட்டவர். ஒருமுறை உத்தரதேசத்திலே வாதாவிஎன்னும் நகரத்திற்சென்று, அதனைவென்று பலவகை இரத்தினங்களும் நிதிக்குவைகளும் யானைக்கூட்டங்களும் குதிரைக்கூட்டங்களும் அரசனுக்கு முன்கொண்டுவந்தார்.

அதுகண்டு அரசன் அவருடைய யானையேற்றத்தின் வலிமையை அதிசயித்துப் புகழ்ந்துபேச அவரை அறிந்த மந்திரிகள் அரசனை நோக்கி, மஹாராஜரே! இவர் பரமசிவனுக்குத்திருத்தொண்டுசெய்துவருவதினால்இவ்வுலகத்திலே இவருக்கு எதிராவார் ஒருவருமில்லை என்றார்கள். அரசன் அதைக்கேட்டு,அஞ்சி,நடுநடுங்கி, இரண்டு கணகளினின்றும் சோகபாஷ்பஞ்சொரிய, இவர் எங்கள் கடவுளாகிய பரமசிவனுடைய திருத்தொண்டர் என்பதை உணராது கொடிய போர்முனையிலே விட்டிருந்தேன். ஐயையோ!இது எவ்வளவு கொடியபாவம் என்று சொல்லி பின்புபரஞ்சோதியாரை நோக்கி, சுவாமீ! இக்குற்றத்தைப் பொறுத்தருளலவேண்டும் என்று பிரார்த்தித்து, நமஸ்கரித்தான். பரஞ்சோதியார் அரசன்தம்மைநமஸ்கரித்தற்குமுன் தாம் அவனை நமஸ்கரித்து மஹாராஜரே ! நான் எனதுஉரிமைத்தொழிற்குஅடுத்த திறத்தைச்செய்வேன். அதனால் என்னதீங்கு என்றார். அரசன் அவருக்கு நிறைந்த நிதிக்குவைகளையுமவிருத்திகளையும் கொடுத்து நீர் உம்முடைய நிலைமையை நான் அறியாவண்ணம் நடத்திக்கொண்டு வந்தீர். இனி என் மனக்கருத்துக்கு இசைந்து, எனக்குப் பணிசெய்தலை ஒழிந்து,நீர்விரும்பியவாறே சிவனுக்குமசிவனடியாாகளுக்கும் வெளிபபடத் திருத்தொண்டுசெய்யும, என்று விடைகொடுத்தான். பரஞ்சோதியார் விடைபெற்றுக்கொண்டு, தமமுடைய திருப்பதியிற் சென்று, கணபதீச்சரத்தில் வீற்றிருக்கின்ற கடவுளைவணங்கி,அவருக்குத்திருத்தொணடுகளை வழுவாது செய்வாராயினர். திருவெணகாட்டு நங்கையார் என்னும மங்கையாரோடுகூடி இல்லறத்தில வாழ்ந்திருந்து, நாடோறும முன்னே சிவனடியார்களைத் திருவமுதுசெய்வித்து, பின் தாம் உண்பாா. சிவனடியார்களை மிகுந்த அன்பினோடு வழிபட்டு, அவாகள் திருமுன்பே மிகச்சிறியராய் ஒழுகுகின்றமையால் அவருக்குச் சிறுதசொண்டர் என்னும் பெயா கொடுக்கப்பட்டது. கணபதீச்சரருடைய திருவருளினாலே அவருக்குத் திருவெணகாட்டு நங்கையாரிடத்திலே சீராளதேவர் என்னும்புத்திரர் அவதரித்தாா. அபபிள்ளைக்கு ஐந்துவயசிலே வித்தியாரம்பஞ்செய்வித்தார். அந்நாளிலே அத்திருப்பதிக்கு எழுந்தருளிவந்த திருஞானசம்பந்தப்பிள்ளையாரை எதிர்கொண்டு அழைத்து, அவரை வணங்கித்துதித்து அவருடைய திருப்பதிகத்திலே சிறப்பித்துப் பாடப்பெற்றார்.

பரமசிவன் சிறுத்தொண்டநாயனருடைய மெய்யன்பைநுகர்ந்தருளுதற்குத்திருவுளங்கொண்டு உட்சமயங்கள் ஆறனுள் ஒன்றாகிய வைரவத்துக்கு உரிய திருவேடங்கொண்டு, திருக்கைலாசத்தினின்றும் நீங்கி, திருச்செங்காட்டங்குடியை அடைந்து. சிறுத்தொண்டநாயனருடைய வீட்டுவாயிலிற்சென்று, சிறுத்தொண்டர் வீட்டில் இருக்கின்றாரோ என்று வினவ,தாதியாராகிய சந்தன நங்

கையார் முன்வந்து வணங்கி, சுவாமீ! அவர் சிவனடியார்களைத்தே டப்புறத்தேபோய்விட்டார். தேவரீர் உள்ளே எழுந்தருளும் என்ருர். அவற்கு வைரவர், பெண்கள் இருக்கும்இடத்தில்நாம்தனியே இரோம் என்று அருளிச்செய்ய, திருவெண்காட்டு நங்கையார் அதைக்கேட்டு, இவ்வடியவர் போய்விடுவார்போலும், என்றுபய ந்து, விரைந்துவந்து,சுவாமீ! அடியேனுடைய நாயகர் எப்போதும் சிவனடியாரை அமுதுசெய்விப்பர். இன்றைக்கு ஒருவரையுங்கா ணமையால் தேடிபபோயினர். தேவரீருடைய திருவேடத்தைக் கண்டாராகில் மிகமகிழ்வர்; இனித்தாழார். இப்பொழுதே வநதுவி டுவார்; எழுந்தருளியிரும ; என்று விண்ணப்பஞ்செயய வைரவர் நாம் உத்தரதேசததிலுள்ளேம் ; சிறுத்தொண்டரைக் காணவந் தேம் ; எபபடியும் அவா இல்லாதபோது நாம் இங்கே இரோம்; கணபதீச்சரத்தில உள்ளதிருவாத்திமரத்தின்கீழ் இருக்கின்றேம், அவர் வந்தமாத்திரத்தே அவருக்குத் தெரிவியுங்கள் ; எனறு சொல்லி,திருவாத்தியை அணைந்து,அதன்கீழ் இருநதருளினர். சிறு த்தொணடநாயனர் சிவனடியார்களைததேடி எங்குங்காணுது வீட் டுக்குத் திருமபிவந்து, மனைவியாருக்குச் சொல்லித துக்கித்தார். மனைவியாா, உத்தரதேசவாசியாகிய ஒரு வைரவர் இங்குவந்தார். நாங்கள் இங்கே எழுந்தருளியிருக்குமபடி சொன்னேம்; அவர் அது கேளாது "கணபதீச்சரத்தில் உள்ள திருவாத்தியின் கீழேபோய் இருக்கின்றேம,நாயகர்வந்தால்அங்கு வரும்படியாய்ச்சொல்என்று சொல்லிச்சென்ருா" என்ருர். உடனே, சிறுத்தொண்டர் மிகுந்த விருப்பத்தினேடு விரைநதுசென்று, அவரைக்கண்டு வணங்கி நிற்க, அவர்பெரிய சிறுத்தொண்டாநீரோஎன்று திருவாய்மலர்ந்த ருளினர். சிறுத்தொணடர் அவரைவணங்கி, சுவாமீ! சிவனடியார் கள் தங்கள் கருணைமேலீட்டினலே அடியேனையே அப்படி அருளி ச்செய்வார்கள். அதுநிற்க, இன்றைக்குத் திருவமுது செய்வித்தற் குச் சிவனடியார்களைத் தேடியும கணடிலேன; இப்போது அடியே னசெய்த புண்ணியத்தினலே தேவரீரைக் கண்டேன் ; குறைகள் விண்டேன் ; தேவரீா அடியேன்வீட்டுக்கு எழுந்தருளித் திருவ முது செய்யவேண்டும் ; என்று மிகவணக்கத்துடன் விண்ணப்பஞ் செய்ய வைரவர் அன்பரே ! "நாம் உத்தரதேசத்தில் உள்ளேம. உம்மைக்காணவந்தேம்; நம்மை அமுதுசெய்வித்தல் உம்மால்முடி யாது ; அதுமிக அருமை;" என்ருர். சிறுத்தொண்டர் தேவரீா அமுதுசெய்யும் இயல்பை அருளிச்செய்யும். சீக்கிரமாகப் பாகம் பண்ணுவிப்பேன். சிவனடியார்கள் தலைப்படின் தேடுதற்கு அரிய னவும் எளியனவாம் ; என்று சொல்ல, வைரவர் நாம் ஆறுமாசத் துக்கு ஒருமுறை பசுவைக்கொன்று உண்போம் ; அதற்கு உரியநா ளும் இந்நாளேயாம்; அப்படி யூட்டுதல் உம்மாலியலாது என்ருர். சிறுத்தொண்டர் மிகநன்று ; அடியேன் அநேகம் பசுக்களை உடை

யேன்;தேவரீருக்குப்பிரீதியாகியபசு இன்னது என்று அருளிச்செய்வீராகில், அடியேன் விரைந்து சென்று, பாகம்பண்ணுவித்துக்காலம் தாழ்க்காமல் வருவேன் ; என்றுசொல்ல வைரவர், நாம் உண்பது நரபசு, அது ஐந்துவயசினை உடையதாயும் அவயவப்பழுதில்லாததாயும் ஒருகுடிக்குத் தான் ஒன்றேயாயும் இருக்கவேண்டும். அப்படிப்பட்ட சிறுவனை மனமகிழ்ச்சியோடு தாய்பிடிக்கத்தந்தை அரிதல்வேண்டும். இப்படிச் சமைக்கப்பட்ட கறியே நாம் இட்டு உண்பேம் என்றார். சிறுத்தொண்டர், தேவரீர் அமுது செய்வீராகில், அடியேனுக்கு இதுவும் அரிதன்று; என்றுசொல்லி அவரைவணங்கி, விடைபெற்றுக் கொண்டு, வீட்டுக்குப் போயினார். சிறுத்தொண்டருடையவரவை நோக்கிநின்ற மனைவியார் அவருடைய மலர்ந்தமுகத்தைக்கண்டு, அடியாருடைய செய்கையை வினவ, அவர் மனைவியாரை நோக்கி,ஒருகுடிக்கு ஒரேசிறுவனாயும் ஐந்து வயசு உடையனுமாயும் அவயவப்பழுதில்லாதவனுமாயும் இருக்கும்ஓர் பிள்ளையை மனமகிழ்ச்சியோடு தாய்பிடிக்கத்தந்தையரிந்து, சமைத்தால் அமுதுசெய்தற்கு உடன்பட்டனர் என்றார். அப்பொழுது மனைவியார் அவ்வடியவரை அவர்விரும்பியபடி அமுதுசெய்விக்கும் பொருட்டு, ஒருகுடிக்கு ஒருவனாஞ் சிறுவனைப்பெறுமாறு எங்ஙனம் என்றுசொல்ல, சிறுத்தொண்டர் என்பிராணநாயகியே ! இத்திறத்துச் சிறுவரைவேண்டிய திரவியங்களைக்கொடுத்தால்தருவாருளராயினும் நேர்நின்று அச்சிறுவனை அரியத்துணியுந் தந்தை தாயரோ இல்லை. இனித்தாழாமல் நாம் அருமையாகப்பெற்ற சிறுவனையே அழைப்போம் என்றார். மனைவியார் அதற்கு இசைந்து, எங்களைக்காக்கும் பொருட்டு அவதரித்த புதல்வனைப் பள்ளிக்கூடத்தி னின்றும் அழைத்துக்கொண்டு வாரும் என்றுசொல்ல, சிறுத்தொண்டர் மனமகிழ்ச்சியோடு பள்ளிக்கூடத்துக்கு விரைந்துசென்று, தமமுடைய புதல்வராகிய சீராளதேவரை எடுத்துத்தோள்மேல் வைத்துக் கொண்டு வீட்டுக்குத்திரும்பிவந்தார். மனைவியார் எதிர்வந்து, புதல்வரைவாங்கி, திருமஞ்சனம் ஆட்டிக்கோலஞ் செய்து, நாயகர் கையிற்கொடுத்தார். அவர் அடுக்களையிற் செல்லாது உலகத்தவர்கள் அறியாவண்ணம் ஓர் மறைவிடத்திற் கொண்டு போனார். அப்பிள்ளையைப் பெற்றதாயார் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டுவந்தார்.தந்தையார் புதல்வரை எடுத்து அவருடையதலையைப்பிடிக்கத் தாயார் அப்புதல்வருடைய இரண்டு கால்களையும் தம்முடைய மடியிலேயிடுக்கி, அவர் கைகள் இரண்டையும் தம்முடையகைகளிலேபிடிக்க அப்புதல்வர் தம்முடைய தந்தைதாயார் மிகமகிழ்கின்றனர் என்று, மகிழ்ந்து,நகைசெய்ய, தந்தையார் மனமகிழ்ச்சியோடு ஆயுதத்தினாலே அவருடையதலையை அரிதலாகிய அரியசெய்கையைச் செய்தார். அறுத்த தலையின் இறைச்சி திருவமுதுக்கு ஆகாது என்று கழித்து, அதனை மறைத்து நீக்கும்பொரு

ட்டு,சந்தனநங்கையார் என்னுந் தாதிகையில்கொடுத்து,மற்றையுறுப்புகளின் இறைச்சிகள் எல்லாவற்றையும்அறுத்துப்பாகம்பண்ணி, வேறுகறிகளும் அமைத்து சோறும் சமைத்து, நாயகருக்குத் தெரிவித்தார்.நாயகராகிய சிறுத்தொண்டர் பெருங்களிப்புடையராகி, விரைந்துசென்று, திருவாத்தியின்கீழ் இருந்த வைரவனை வணங்கி, சுவாமீ!தேவரீர் பிரியப்படிப் பாகம்பண்ணுவித்தேன். எழுந்தருளிவந்துதிருவமுது செய்தருளல் வேண்டும், என்று விண்ணப்பஞ்செய்து அவனைவீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய்,ஆசனத்திலஇருத்திஅவருடைய திருவடிகளை ஜலத்தினுல் விளக்கி அந்தத்தீர்த்தத்தைத் தங்கள் சிரசின்மேலேதெளித்து வீடெங்கும் புரோக்ஷித்து, தூபதீபங்களால் அருச்சித்துவணங்கினுர்.மனைவியாராகிய திருவெண்காட்டுநங்கையாா பரிகலந்திருத்தி, அன்னமும் கறியமுதும் படைத்தார். வைரவர் அதைப்பார்த்து, நாம்சொலலிய முறையே கொன்ற பசுவினது உறுப்புகள் எல்லாவற்றையும் பாகம் பண்ணினீரா? என்று வினுவ, திருவெண்காட்டுநங்கையார், தலை இறைச்சி மாத்திரம் திருவமுதுக்கு ஆகாது என்று கழித்துவிட்டோம என்றுர். வைரவர் அதுவும நாம் உண்பது என்றுர், அதுகேட்டு சிறுத்தொண்டர் மனைவியாரோடும் திகைத்து அயர, சந்தனநங்கையாா, நான் அத்தலை இறைச்சியை அடியவா அமுதுசெய்யுமபொழுது நினைக்கவரும் என்று முன்னமே பாகம்பண்ணி வைத்தேன் எனறு எடுத்துக்கொடுக்க, திருவெணகாட்டுநங்கையார் முகமலர்ந்துவாங்கிப்படைத்தார். அதன்பின், வைரவர் சிறுத்தொண்டரைநோக்கி, நாம் தனியே உண்ணேம்; சிவனடியார்களைக்கொண்டுவாரும் என்று அருளிச்செய்ய, சிறுத்தொண்டர் ஏங்கி ஐயோ! அடியவர் திருவமுது செய்தற்கு இடையூறு இதுவோ என்று நினைத்து வீட்டுக்குப்புறத்திலேபோய், சிவனடியார்களைத் தேடிக்காணுது, துக்கத்தோடு திரும்பிவந்து,வைரவனைவணங்கி,சுவாமீ! சிவனடியார்களைக்காணேன்;அடியேன் திருநீறு இடுவோரைக் கண்டு அன்னங்கொடுப்பேன் என்று விண்ணப்பஞ்செய்ய வைரவர் சிறுத்தொண்டரை நோக்கி உம்மைப்போலத் திருநீறு இட்டார் உளரோ நீர் இருந்து உண்ணும் என்றுசொல்லி, பின்திருவெணகாட்டுநங்கையாரைநோக்கி, இருவருக்குச் சோறுங்கறியும் படையும் என்று அருளிச்செய்ய, அவரும்படைத்தார்;சிறுத்தொண்டர் வைரவரை ஊட்டவேண்டி உண்ணப்புகலும் வைரவர் தடுத்தருளி, ஆறுமாசத்துக்கு ஒருமுறை உண்ணுகிற நாம் உண்ணுமளவும் தரியாமல், எப்பொழுதும் உண்ணுகினற நீர்முன் உண்பது என்? உம்முடன் உண்ணுமபொருட்டு, உமக்குப் புத்திரன் உண்டேல், அழையும் என்றுா. சிறுத்தொண்டர் இப்போது அவன்உதவான் என்றுசொல்ல,வைரவர் அவன் வந்தாற்றுன் நாம்உண்பேம். போய்அழையும் என்றுர். சிறுத்தொண்டர் தரியாது எழுந்து,மனைவியாரோடு விரைந்துவீட்

டுக்குப்புறத்திலேபோய் சீராளா! வா என்று அழைக்க, மனைவியாரும் நாயகரது பணியில் நிற்பாராகி, சீராளனே! சிவனடியார் அடியேங்கள் உய்யும்பொருட்டு உடனுண்ண, உன்னை அழைக்கின்றார் வா என்று அழைத்தார். அப்பொழுது அப்புதல்வர் பரமசிவனது திருவருளினாலே பள்ளிக்கூடத்தினின்று ஓடிவருபவர்போல வந்தார்.

தாயார் அவரை எடுத்துத்தழுவி, நாயகர் கையிற்கொடுக்க, அவர் இனிச்சிவனடியார் அமுதுசெய்யப் பெற்றோம் என்று மன மிகமகிழ்ந்து அப்புதல்வரைவிரைவிற்கொண்டு, அடியவரை அமுது செய்வித்தற்கு உள்ளேவந்தார். அதற்குமுன வைரவர் மறைந்தருள, சிறுத்தொண்டர் அவரைக்காணுமையால் மனங்கலங்கி, திகைத்துவிழுந்தார். கலத்திலே இறைச்சிக்கறியமுதைக்காணுமையால் அச்சமுற்றார். வைரவர் அடியேங்கள் உய்யும்பொருட்டுத் திருவமுதுசெய்யாமல் எங்கே ஒளித்தனரோ என்று தேடிமயக்கங்கொண்டு, புறத்திற்செல்ல, அச்சிறுத்தொண்டர்செய்தது நிஷேதானுட்டானமாயினும், அவர் சிவானந்தானுபவமேலிட்டு நிற்கையால கருவிகரணங்கள் தற்போதசீவிப்பாய் நின்றுசெய்யாது, சிவபோதசீவிபபாய் எழுந்துசெய்தமைபற்றி அதனை விகிதானுட்டானமாகவே கொணடருளிய பரமசிவன் அரிபிரமேந்திராதிதேவர்கள் முனிவர்கள் முதலாயினோர்சேவிக்க, உமாதேவியோடும் சுப்பிரமணிய சுவாமியோடும் இடபாரூடராய் ஆகாயத்திலே தோன்றியருளினார். சிறுத்தொண்டரும் மனைவியாரும் புதல்வரும் தாதியாரும ஆகிய நால்வரும் அவர்களைத்தரிசித்து, ஆனந்த பாஷ்பம் சொரிய, எலும்பும் மனமும் நெக்கு நெக்குருக, பரவசமாய்விழுந்து நமஸ்கரித்து, எழுந்து அஞ்சலியஸ்தர்களாகி நின்று, ஸ்தோத்திரம் பண்ணினார்கள். பின்பு பரமசிவனும் பார்வதியம்மையும் சுப்பிரமணியசுவாமியும் அவர்கள் நால்வரையும், தங்களை எக்காலமும் பிரியாது வணங்கிப்பேரின்பத்தை நுகர்ந்துகொண்டிருக்கும் பொருட்டு, உடன்கொண்டு திருக்கைலாயத்தை அடைந்தார்கள். சுபம்! சுபம்!!

சிறுத்தொண்டநாயனார் முத்தி அடைந்தநாள்:—

சித்திரைமூ பரணிநக்ஷத்திரம்.

## சிறுத்தொண்டநாயனார்

### திவ்விய சரித்திரம்

### முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

திருவருட்பிரகாசவள்ளலார் என்னும்

சிதம்பரம்

# இராமலிங்கசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

# சிவசிதம்பரசங்கீர்த்தனம்.

---

கட்டளைக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

[illegible]

[illegible] (க)

[illegible] (உ)

[illegible] (௩)

[illegible]

சிதம்பரம் இராமலிங்கசுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய

# நமச்சிவாய ஸங்கீர்த்தனலகரி

திருச்சிற்றம்பலம்.

சொல்லவாவியதொண்டர்தம்மனத்திற் சுதந்தரங்கொடுதோன்றியதுணை
யைக்,கல்லவாவியவேழையேனெஞ்சுங்கரைந்துவந்திடக்கலந்திடுங்களிப்
பை,செல்லவாவியபொழிற்றிருவொற்றித்தேனைத்தில்லைச்சிற்றம்பலத்தா
டு,நல்லவாழ்வினைநான்மறைப்பொருளைநமச்சிவாயத்தைநான்மறவேனே.

அட்டமூர்த்தமதாகியபொருளை யண்டராதியோரறிகிலாத்திறத்தை
மிட்டவேட்கையர்க்கங்கையிற்கனியை வேதமூலத்தைவித்தகவிளைவை
யெட்டரும்பரமானந்தநிறைவை யெங்குமாகிநின்றிலங்கியவொளியை
நட்டமாடியநடனநாயகத்தை நமச்சிவாயத்தைநான்மறவேனே. (௨)

உம்பர்வான்றுமமொழித்தருள்சிவத்தை யுலகெலாம்புகழுத்தமப்பொருளை
த்,தம்பமாயகிலாண்டமுந்தாங்குஞ் சம்புவைச்சிவதருமத்தின்பயனைப்
பம்புசீரருள்பொழிதருமுகிலைப் பரமஞானத்தைப்பரமசிற்சுகத்தை
நம்பினோர்களைவாழ்விக்குநலத்தை நமச்சிவாயத்தைநான்மறவேனே.(௩)

மாலினுச்சிமேல்வதிந்தமாமணியை வழுத்துநாவகமணக்குநன்மலரைப்
பாலினுள்ளினிதோங்கியசுவையைப்பத்தர்தம்முளம்பரிசிக்கும்பழத்தை
யாலினோங்கியவானந்தக்கடலை யம்பலத்திலாமமுதைவேதங்க
ளாலினொற்றியூரமர்ந்திடுஞ்சிவத்தை நமச்சிவாயத்தைநான்மறவேனே. ()

உண்ணிறைந்தெனையொளித்திடுமொளியையுண்ணவுண்ணமேலுவட்டிடு
நறவைக், கண்ணிறைந்ததோர்காட்சியையாவுங் கடந்துமேலவர்கலந்திடு
முறவை, யெண்ணிறைந்தமாலயன் முதற்றேவர் யாருங்காண்கிலாவின்
பத்தினிறைவை, நண்ணியொற்றியூரமர்ந்தருள்சிவத்தைநமச்சிவாயத்தை
நான்மறவேனே. (௫)

திக்குமாறினுமெழுகடற்புவிமேற் சென்றுமாறினுஞ்சேண்விளங்கொளிக
ளுக்குமாறினும்பெயலின்றியுலகி லுணவுமாறினும்புவிகளோரேழு
மிக்குமாறினுமண்டங்களெல்லாம் விழுந்துமாறினும்வேதங்களுணரா
நக்கனெம்பிரானருட்டிருப்பெயரா நமச்சிவாயத்தைநான்மறவேனே. ()


பெற்றதாய்தனைமகமறந்தாலும் பிள்ளையைப்பெறுந்தாய்மறந்தாலு
முற்றதேகத்தையுயிர்மறந்தாலு முயிரைமேவியவுடன்மறந்தாலுங்
கற்றநெஞ்சகங்கலைமறந்தாலுங் கண்கணின்றிமைப்பதுமறந்தாலு
நற்றவத்தவருள்ளிருந்தோங்கு நமச்சிவாயத்தைநான்மறவேனே. (௭)

உடையுடுத்திடவிடைமறந்தாலு முலகுளோர்பசிக்குணமறந்தாலும்
படையெடுத்தவர்படைமறந்தாலும் பாவைதானலைப்பதுமறந்தாலும்
புடையடுத்தவர்தமைமறந்தாலும் பொன்னைவைத்தவப்புதைமறந்தாலு
நடையடுத்தவர்வழிமறந்தாலு நமச்சிவாயத்தைநான்மறவேனே. (௮)

வன்மைசெய்திடும்வறுமைவந்தாலு மகிழ்வுசெய்பெருவாழ்வுவந்தாலும்
புன்மைமங்கையர்புணர்ச்சிநேர்ந்தாலும் பொருந்தினாலுநின்றாலுஞ்சென்
றாலும், தன்மையில்லவர்சார்பிருந்தாலுஞ் சான்றமேலவர்தமையடைந்தா
லு,நன்மையென்பணயாவையுமளிகுநமச்சிவாயத்தைநான்மறவேனே.

இன்னும்பற்பலநாளிருந்தாலு மிக்கணந்தனிலேயிறந்தாலுந்
துன்னும்வான்கதிக்கேபுகுந்தாலுஞ் சோர்ந்துமாநரகத்துழன்றாலு
மென்னமேலுமிங்கெனக்குவந்தாலு மெம்பிரானெனக்கியாதுசெய்தாலு
நன்னெஞ்சகநாடிநின்றோங்கு நமச்சிவாயத்தைநான்மறவேனே. (௰)

திருச்சிற்றம்பலம்.



திருக்குறிப்புத்தொண்டநாயனார்.



காரைக்காலம்மையார்.